2013 ஏப்ரல் 16] [திரு. எம்.சி. சம்பத்]

12–4–2013 அன்று வழங்கிய இடைக்காலத் தீர்ப்பில், 4 நபர்கள் கொண்ட குழு ஆலையை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அந்த அறிக்கையின் அடிப்படையில் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தனது தீர்ப்பினை வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் ஸ்டெர்லைட் தொழிற்சாலையை ஆய்வு செய்ய 4 நபர்கள் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்படவேண்டும்.

பிற்பகல் 12–05

நிபுணர் குழு நியமிப்பது குறித்து 18–4–2013 அன்றுதான் முடிவுசெய்யப்படும். இதில் வாரியம் வாயிலாக ஓர் உறுப்பினரும், தொழிற்சாலை வாயிலாக ஓர் உறுப்பினரும் என்.ஜி.டி. மூலமாக எக்ஸ்பர்ட் மெம்பர் என்.ஜி.டி. சொல்வதுபடி அமைய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அடிப்படையில் பசுமைத் தீர்ப்பாயத்தில் வருகின்ற தீர்ப்பினைப் பொறுத்து, நீரின் தன்மை, நிலத்தின் தன்மை மற்றும் காற்றின் தன்மை ஆகியவை குறித்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு முழுமையாக கொண்டுசெல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல் தொடர்ச்சி

(ஆ) கூட்டுறவுத் தேர்தல்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013–2014 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. (குறுக்கீடுகள்) இல்லை காலையில்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து கொடுத்தீர்கள். இன்றுதான் என்னுடைய அறையில் காலை 9–55 மணிக்கு கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்). நீங்கள் கொடுத்த உடனேயே எடுக்கவேண்டுமென்றால் எப்படி? அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. பதில் வந்த உடனேயே, முறையாக, ஒவ்வொன்றாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) இல்லை, காலையில் அறிவிப்புக் கொடுத்துவிட்டு, இப்போது உடனேயே கேட்டால் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)

காலையில் அறிவிப்புக் கொடுத்துவிட்டு இப்போது கேட்டால் எப்படி? என்ன, திரு. அ. சவுந்தரராசன்? எல்லாரும் எழுந்தால் எப்படி? யாராவது ஒருவர் எழுந்து சொல்லுங்கள். எல்லாரும் எழுந்தால் எப்படி? உட்காருங்கள். திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் சொல்லுங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: *அதாவது கூட்டுறவுத் தேர்தல் நேற்றும் இதற்கு முன்பு நடந்த சந்தர்ப்பங்களிலும் ** காவல் துறையினரிடம் முறையிட்டால் நாங்கள் என்ன செய்வது என்று கேட்கிறார்கள். ஆணையத்திடம் முறையிட்டால். . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுக்காக கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஆய்விற்கே எடுத்துக்கொள்ளவில்லை. ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படாத ஒரு பொருள்பற்றி அவையிலே பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் ஒரு வார்த்தையில் என்ன சொல்கிறீர்கள் என்று பார்த்தால் விவாதத்திற்குள் போகிறீர்கள். இதுபற்றிப் பேசமுடியாது. (குறுக்கீடுகள்) நான் இன்னும் அனுமதிக்கவில்லை. இந்தப் பிரச்சினை குறித்து இன்று காலையில்தான் கொடுத்தீர்கள். உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் எழுந்தால் எப்படி? உட்காருங்கள். ஒரு வார்த்தையில் என்ன விஷயம் சொல்கிறீர்கள் என்று பார்த்தால், அவர் விவாதத்திற்குள் செல்கிறார். (குறுக்கீடுகள்) விவாதத்திற்குள்ளே செல்வதற்கு வாய்ப்பில்லை. திரு. பாலகிருஷ்ணன், விவாதத்திற்கெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது. விவாதம் எல்லாம் இதில் இல்லை. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2013 ஏப்ரல் 16]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே இதை ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தாலும், அவர் மானியக் கோரிக்கையின்மீது தன்னுடைய கருத்துகளைப் பதிய வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தக்க பதிலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இதை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுபற்றி விவாதிக்க வேண்டாம். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் நீங்கள் ஏற்கெனவே பேசி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக பதில் சொல்லியிருக்கிறார்கள். தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நீங்கள் திடீரென்று இந்தப் பிரச்சினையைப்பற்றி நான் அனுமதிக்காமல் பேசுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்காமல் பேசுவது சரியல்ல. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெளிவான விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

பிற்பகல் 12—10

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்றைக்கு மானியக் கோரிக்கைகள்மீது சில பிரச்சினைகளை, சில வினாக்களை எழுப்பினார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், நானும் சில விவரங்களை இங்கே தந்தோம். அவற்றுள் சிலவற்றை கவனத்தில் எடுத்துக்கொள்ளாமலுங்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் இருந்திருக்கலாம். மீண்டும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் தரக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை. உட்காருங்கள், உங்களுக்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்). இல்லை, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 16

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உங்களுக்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன கேட்க வருகிறீர்களோ, அதற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அதற்குத்தான் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேன். இப்படிக் குறுக்கிட்டால் எப்படிப் பேசுவது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இங்கே பாருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கொடுத்த நோட்டீஸ் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *பதில் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த நோட்டீஸ்... .(குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன், ஒரு நிமிடத்தில் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன், ஒரு நிமிடத்தில் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், திரு. அ. சவுந்தரராசன் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) நான் அவரைப் பேச அழைத்திருக்கிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான்தான் அவரைப் பேசவிடுகிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதுதான் பேசவிடுகிறேன் என்று சொல்கிறேன், அப்படியிருந்தும் நீங்கள் உட்கார மாட்டேன் என்கிறீர்களே? (குறுக்கீடுகள்)*

2013 ஏப்ரல் 16]

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று சென்னையில்,—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்குப் பிறகு நிலைமை மேலும் மோசமடைந்திருக்கிறது என்பதனால்தான் நாங்கள் இன்று இதை வலியுறுத்த நேர்ந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, என்னிடம் கொடுத்த அறிவிப்புக்கு . . . (குறுக்கீடு)

திரு. அ. சவுந்தரராசன்: இல்லாவிட்டால், மாண்புமிகு அமைச்சர் பதிலோடு நாங்கள் திருப்தி அடைந்திருப்போம். மாண்புமிகு அமைச்சர் சொன்னபடி நடக்கவில்லை. ** நேற்று சென்னையிலே, திண்டுக்கல்லிலே, ஈரோட்டிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதையெல்லாம் ** என்று நீங்கள் சொல்லக்கூடாது. அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) நீங்கள் என்னிடம் கொடுத்த நோட்டீஸ் குறித்துதான் பேசவேண்டுமேயொழிய, தேவையில்லாதவற்றைப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) என்னிடம் நோட்டீஸ் கொடுத்துவிட்டு, அதுகுறித்துதான் நீங்கள் பேசுவீர்கள் என்று பார்த்தால், நீங்கள் detailed ஆக உள்ளே போகிறீர்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய கோரிக்கையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் மானியக் கோரிக்கையில் இதைப்பற்றி விவரமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளேன். அதாவது இதுவரை தமிழகத்தில் கூட்டுறவுத் தேர்தல் வரலாற்றில் (குறுக்கீடுகள்) கூட்டுறவுத் தேர்தல் வரலாற்றிலேயே ஒரு ஆணையம் அமைத்து கூட்டுறவுத் தேர்தலை நடத்திய ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோன்று முழுமையான அதிகாரங்கள் தேர்தல் ஆணையத்திற்குக் கொடுக்கப்பட்டு, தேர்தல் ஆணையத்தாலே இந்தத் தேர்தல்களுக்கான தேதிகள் குறிப்பீடு செய்யப்பட்டு, யார், யார் தேர்தல் பணியாளர்கள் என்பதையும் அவர்களே நியமித்துக்கொள்கிறார்கள். அதாவது, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் தேர்தல் விதிகளின்படி தேர்தல் ஆணையம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. செல்லூர் கா. ராஜு] [2013 ஏப்ரல் 16

வெளியிட்டுள்ள கையேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கையேடுகளில், தவறுகள் இருந்தால் அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று அறிவுரையும் குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. எனவே, கூட்டுறவுத் தேர்தலில் பொதுவாக முறைகேடுகள் ஏற்பட வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்கார்ந்துகொண்டு யாரும் பேசாதீர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: ஏதேனும் ஒரு சங்கத்தில் தேர்தல் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்று உரிய விவரங்களுடன் ஆணையத்திடம் குறிப்பிட்டுச் சொன்னால், அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை ஆணையம் மேற்கொள்ளும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அழகாகக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆணையத்திடமே நீங்கள் போய் இதைப்பற்றி உறுதியாக முறையிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் சொன்ன மாதிரி இது ** எனவே, அவர்கள் சொன்ன அந்த வார்த்தையை எடுத்துவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் சொன்ன ** என்கிற அந்த வார்த்தையும், நான் சொல்வது உட்பட அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: அது முழுமையான அதிகாரம் பெற்ற ஒரு ஆணையம். அதனிடத்திலே இவர்களுடைய கோரிக்கையை வைப்பார்களேயானால், ஆணையம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையோடு இந்தப் பிரச்சினை தீர்ந்தது. மேற்கொண்டு இதுகுறித்துப் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) மேற்கொண்டு இதுபற்றிப் பேசுவதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் ஆணையத்திடம் முறையிடுங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்குமேல் பேச வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 16]

பிற்பகல் 12—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013—2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) என்ன, திரு. எம். ஆறுமுகம்? இல்லை. டாக்டர் க. கிருஷ்ணசாமி, அவர்கள் சொன்னதைத்தான் நீங்கள் சொல்லப் போகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் இரண்டு பேரும் எழுந்து நின்றால் எப்படி? திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள்.*

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு உருவாக்கியிருக்கிற ஆணையத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இதை நீங்கள் ஆணையத்திடம் முறையிட வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மானியக் கோரிக்கையில் இந்தப் பிரச்சினை எழுந்தபொழுது சொல்லியிருக்கிறேன். தேனி மாவட்டம், கோவிந்தநகரம், வெங்கடாசலபுரம் ஆகிய இரண்டு ஊர்களிலுமே கிட்டத்தட்ட 25 பேர்களுக்கு* nomination, *யார் யார் எல்லாம்* nomination *தாக்கல் செய்தார்களோ, அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டது. தேர்தலும் முறையாக நடத்தப்பட்டது. தேர்தல் நடத்தப்பட்டு, இன்றைக்கு முடிவுகளும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, முறையாகத்தான் தேர்தல் ஆணையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இதிலே விவாதம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இதிலே விவாதம் ஒன்றும் இல்லை,*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. ஆறுமுகம் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இதிலே விவாதம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தேர்தலை முறையாக நடத்தவில்லை என்று சொல்கிறார்கள். நேற்றையதினம் திண்டுக்கல் மாவட்டத்திலே போக்குவரத்துச் சங்கத்தில் நடைபெற்ற கூட்டுறவுத் தேர்தலில் அண்ணா தொழிற்சங்கமும், சி.ஐ.டி.யு. தொழிற்சங்கமும் அங்கே வேட்பு மனுத் தாக்கல் செய்தன. ஆனால், அங்கே சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் வெளியாட்களை எல்லாம் வரவழைத்து, சோடா பாட்டில்கள், கத்தி, அரிவாள்--அதோடு கல்லால் எறிந்து வாகனங்களைத் தாக்கினார்கள். இதில் அண்ணா தொழிற்சங்கத்தைச் சேர்ந்த 5 பேர்களின் மண்டை உடைந்து, காயப்பட்டு இன்றைக்கு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்கள் மட்டும் ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். அதுதான் வேடிக்கையாக இருக்கிறது, விநோதமாக இருக்கிறது. அவர்களும் மனுத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அங்கே அண்ணா தொழிற்சங்கம் சார்பில் 11 பேர், சி.ஐ.டி.யு. சார்பில் 11 பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால், வாக்கெடுப்பு நடந்தால் தோல்வி வரும் என்ற காரணத்தினாலே, அங்கே அண்ணா தொழிற்சங்கம் வேட்பு மனுத் தாக்கல் செய்கின்றபொழுது, அவர்கள் வெளியாட்களை அழைத்து வந்து, திடீரென்று 100 ஆட்களை வைத்து அங்கே சோடா பாட்டில், கல் எறிந்து, சுற்றி வளைத்துத் தாக்கி, 5 பேர்கள் மண்டை உடைந்து, கடுமையாக காயமுற்று மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த அளவுக்கு ஆபத்தான நிலையிலே மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தாக்கியது இவர்கள் தொழிற்சங்கம். வேட்பு மனுத் தாக்கல் செய்திருக்கிறது. ஆனால், அவர்கள்தான் தோல்வி பயத்திலே தடுத்தார்கள். அதுதான் நடந்த உண்மை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் இங்கே வந்து ** என்று சொல்லி ஒரு தவறான குற்றச்சாட்டைப் பதிவு செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே இதுவரை தமிழ்நாட்டிலே முதல் கட்டத் தேர்தல் நடந்து இருக்கிறது. இதிலே பல மாவட்டங்களிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் —அந்தச் சங்கம் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்து அவர்களே— தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் Member ஆக இருக்கிறார்கள். Director ஆக இருக்கிறார்கள். இதை மறுக்க முடியுமா? எல்லா மாவட்டங்களிலும் நடந்திருக்கிறது. ஏதோ ஒன்றிரண்டு சங்கங்களில் இது நடந்திருக்கலாம். ஒட்டுமொத்தமாக இதைப்பற்றிக் குறை சொல்வதும், ஆணையத்தைப்பற்றிக் குறை சொல்வதும், இதைப்பற்றி இங்கே பேசுவதும் சரியல்ல என்பதை ஏற்கெனவே மானியக் கோரிக்கையிலே சொல்லியிருக்கிறேன். அதற்கு இது இடம் அல்ல. நீங்கள் ஆணையத்திடம் முறையிடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். காவல் துறையிடம் சொல்லலாம். காவல் துறை அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கிறது. எனவே தவறான தகவலை இங்கே கொடுத்திருக்கிறார்கள்; பதிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையத்தைப்பற்றி குறிப்பிட்டு இருந்தாலும், அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது தேர்தல் ஆணையத்தைப்பற்றியும், கூட்டுறவுத் தேர்தல் ஆணையத்தைப் பற்றியும் அதனுடைய அதிகாரத்தைப்பற்றியும் குறிப்பிடப்பட்ட வார்த்தைகள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி சொல்லுங்கள். ஒரே வார்த்தையில் சொல்லுங்கள்.

பிற்பகல் 12–20

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு என்ற அடிப்படையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் ஒன்றும் விவாதமில்லை. என்ன சொல்ல வருகிறீர்கள்?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: ** என்று ஒட்டுமொத்த மக்களும் பேசிக்கொள்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, விடுங்கள். முறையாக நடந்தது என்று மாண்புமிகு அமைச்சர்தான் சொல்லிவிட்டார், உட்காருங்கள்.*

(உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 26—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013–2014 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைமீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.831,70,35,000/—, மூலதனக் கணக்கில் ரூ.856,00,07,000/— மற்றும் கடன் கணக்கில் ரூ.170,00,05,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 848, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1439, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*